**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்: மலர்விழி**

தேதி: 04.09.2025 நேரம்: மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

புதுடெல்லியில், சிங்கப்பூர் பிரதமருக்கும், பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும் இடையிலான பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, பல்வேறு துறைகளில், 5 இருதரப்பு உடன்பாடுகள் கையெழுத்தாகி உள்ளன.

வங்கி சேவைகளை, மக்களின் வீட்டிற்கே சென்று வழங்கும், உலகின் மிகப் பெரிய வங்கிக் கட்டமைப்பாக, இந்தியாவின் அஞ்சல் துறை மேம்பட்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்திய உயர்கல்வி நிறுவனங்களுக்கான NIRF தரவரிசைப் பட்டியலில் சென்னை ஐஐடி-இந்திய தொழில்நுட்பக் கழகம் முதல் இடம் பெற்றுள்ளது.

வரிக் குறைப்பு உட்பட, ஜிஎஸ்டி கட்டமைப்பில் மத்திய அரசு அறிவித்துள்ள மாற்றங்களை, புதுச்சேரி உட்பட நாடு முழுவதும், அனைத்துத் தரப்பினரும் வரவேற்றுள்ளனர்.

------------------------

*இந்தியா-சிங்கப்பூர் 1 (17)*

புதுடெல்லியில், பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், சிங்கப்பூர் பிரதமர் திரு லாரன்ஸ் வோங்-கிற்கும் இடையே, இன்று நடைபெற்ற பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையே, சிவில் விமானப் போக்குவரத்து, விண்வெளி, திறன் மேம்பாடு, டிஜிட்டல்

புதுமையாக்கம் உள்ளிட்ட துறைகளில் 5 உடன்பாடுகள் கையெழுத்தாயின.

இருதரப்பு உறவுகளில், தொழில்நுட்பப் புதுமைகளே, வலுவான தூணாக திகழ்வதாகவும், செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கணினி உள்ளிட்ட துறைகளில், ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்ள, இருநாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளதாகவும், பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். பரஸ்பர வர்த்தகத்தை ஊக்குவிக்கும் வகையில், பொருளாதார ஒத்துழைப்பிற்கான விரிவான இருதரப்பு உடன்பாட்டை காலக்கெடு அடிப்படையில் மறு ஆய்வு செய்யவும், இருநாடுகளும் முடிவு செய்து இருப்பதாக அவர் கூறினார்.

தீவிரவாதம் குறித்து இருநாடுகளும் பொதுவான கவலைகளை பகிர்ந்து கொள்வதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் போராட்டங்களுக்கு, சிங்கப்பூர் அளித்து வரும் ஆதரவுக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

*இந்தியா-சிங்கப்பூர் 2 (12)*

சிங்கப்பூரில் தயாரிக்கப்பட்ட, 20க்கும் மேற்பட்ட செயற்கைக் கோள்களை இந்தியா ஏற்கனவே விண்ணில் செலுத்தி இருப்பதாகவும், புதிய உடன்பாடுகளால், விண்வெளி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு இன்னும் வலுப்பெறும் என்றும், சிங்கப்பூர் பிரதமர திரு. லாரன்ஸ் வோங் கூறினார்.

தொடர்ந்து, சிங்கப்பூர் பிரதமரும், பிரதமர் திரு. நரேந்திர மோடியும் இணைந்து, மும்பை ஜவஹர்லால் நேரு துறைமுகத்தின், 2ஆம் கட்ட PSA

Mumbai சரக்குப் பெட்டக முனையத்தை, மெய்நிகர் முறையில் திறந்து வைத்தனர். மத்திய கப்பல் மற்றும் துறைமுகத் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால், காணொளிக் காட்சி மூலமாகவும், இணையமைச்சர் திரு. சந்தனு தாக்கூர், மகாராஷ்ட்ர முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்நவிஸ் ஆகியோர் நேரடியாகவும், விழாவில் பங்கேற்றனர்.

------------------------

*மோடி-அஞ்சல் துறை (8)*

இந்தியாவின் அஞ்சல் துறை, வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கே சென்று, வங்கி சேவைகளை வழங்கக் கூடிய, உலகின் மிகப் பெரிய வங்கிக் கட்டமைப்பாக, தற்போது மேம்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். சாதாரண தபால் காரர்கள், அனைவரையும் உள்ளடக்கிய நிதிக் கட்டமைப்பின் தூதர்களாக தற்போது மேம்பட்டு இருப்பதற்கு, அரசின் இடைவிடாத முயற்சிகளே காரணம் என்றும், அவர் தெரிவித்துள்ளார். இண்டியா போஸ்ட் பேமென்ட் வங்கியின் சேவைகள் குறித்து, மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்யா சிந்தியா, இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவிற்கான பதிலில், பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

------------------------

*தர்மேந்திர பிரதான்* 1 (17)

இந்திய உயர்கல்வி நிறுவனங்களின் தேசிய அளவிலான NIRF தரவரிசைப் பட்டியலை மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், புதுடெல்லியில் இன்று வெளியிட்டார். இதன்படி, அனைத்து உயர்கல்வி

நிறுவனங்களின் ஒட்டுமொத்தப் பிரிவில், **சென்னை ஐஐடி**, முதல் இடம் பெற்றுள்ளது. பெங்களூரு இந்திய அறிவியல் கழகம், 2ஆம் இடமும், மும்பை ஐஐடி, 3ஆம் இடமும் பெற்றுள்ளன.

இந்தியாவின் உயர்கல்வி நிறுவனங்களில், கடந்த 2014-15ஆம் ஆண்டில், மூன்றரை கோடிக்கும் குறைவான எண்ணிக்கையில் மட்டுமே மாணவர்கள் இருந்த நிலையில், தற்போது இது, நாலரைக் கோடியை எட்டி இருப்பதாக, அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்தார். 2030ஆம் ஆண்டிற்குள், இந்த எண்ணிக்கையை 2 மடங்காக உயர்த்தும் இலக்குடன் அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். உலக நாடுகளில் உயர்கல்வித் துறை பற்றிய டைம்ஸ் தரவரிசைப் பட்டியலிலும், இந்தியா, கணிசமான அளவில் முன்னேறி இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். உலகின் மிக சிறந்த 100 நிர்வாகவியல் உயர்கல்வி நிறுவனங்களின் Financial Times பட்டியலில், இந்தியாவில் இருந்து 6 ஐஐஎம் உட்பட, 8 உயர்கல்வி நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளதாக அவர் மேலும் கூறினார். NIRF தரவரிசைப் பட்டியல், குறித்து கூடுதல் விவரங்கள்.....

**(வாய்ஸ்)**

*தர்மேந்திர பிரதான்* 2 (10)

**(வாய்ஸ்)**

NIRF தரவரிசைப் பட்டியலில், சென்னை ஐஐடி உயர்கல்வி நிறுவனம், பொறியியல் கல்வி நிறுவனங்கள் பிரிவிலும் முதலிடம் பெற்றுள்ளது. நிர்வாகவியல் கல்வி நிறுவனங்கள் பிரிவில், ஐஐஎம் அகமதாபாத், சட்டக் கல்வி நிறுவனங்கள் பிரிவில், பெங்களூரு தேசிய

சட்டப் பள்ளி, மருத்துவக் கல்வி நிறுவனங்கள் பிரிவில், டெல்லி எய்ம்ஸ் ஆகியன, முதலிடம் பெற்றுள்ளன. புதுச்சேரி ஜிப்மர், மருத்துவ உயர்கல்வி நிறுவனங்கள் பிரிவில், தேசிய அளவில் 4ஆம் இடம் பெற்றுள்ளது. கடந்த ஆண்டு 5ஆம் இடத்தில் இருந்த ஜிப்மர், இவ்வாண்டு 4ஆம் இடத்திற்கு முன்னேறி இருப்பதை ஒட்டி, ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர் சிங் நேகி, ஜிப்மர் மருத்துவர்கள், ஊழியர்கள் உட்பட அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

------------------------

கைலாஷ்நாதன் (8)

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இன்று, காரைக்கால் மாவட்டம் பட்டினச்சேரி மீனவர் கிராமத்தில், மத்திய திட்டத்தின் கீழ், மீன்வள பல்நோக்கு மையம், மற்றும், மீன் உலர்வு தளம் அமைக்கும் பணிகளை, பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தார். காரைக்கால் அரசு மருத்துவமனையில், புதிதாக நிறுவப் பட்டுள்ள எம்ஆர்ஐ ஸ்கேன் கருவியை, அவர் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார். முன்னதாக, கிளிஞ்சல்மேடு எல்லையம்மன்-மாரியம்மன் கோவில் மகா கும்பாபிஷேக விழாவிலும், துணை நிலை ஆளுநர் கலந்து கொண்டார்.

------------------------

ஜிஎஸ்டி தொழில் 1 (16)

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களை, பல்வேறு தொழில் துறை அமைப்புகள் வரவேற்றுள்ளன. நாட்டில் முதலீடு, மற்றும், உற்பத்தியை பெருக்க, ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் உதவிகரமாக இருக்கும்

என்று, அசோசேம்-தொழில் வர்த்தகக் கூட்டமைப்பின் பொதுச் செயலர் திரு. அசோக் சிங்கால் கூறியுள்ளார். 2 அடுக்கு வரிக் கட்டமைப்பினால், சிறு-குறு, மற்றும், நடுத்தர தொழில் நிறுவனங்களின் **வரி இணக்கச் சுமை** குறையும் என்றும், வரிக் குறைப்பினால், சாதாரண மனிதனின் கையில், **செலவு போக மிஞ்சும் பணம்** அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். டிஜிட்டல் மயத்துடன், வரி சீர்திருத்தங்களும் இணைவதால், அனைவருக்குமே, வாழ்க்கை எளிதாகும் என்று அவர் கூறியுள்ளார்.

ஜிஎஸ்டி கட்டமைப்பில் அறிவிக்கப் பட்டுள்ள மாற்றங்களால், நாட்டில் பொருட்களின் தேவையும், வேலை வாய்ப்புகளும் அதிகரிக்கும் என்றும், சிஐஐ-இந்திய தொழில்கள் கூட்டமைப்பு கூறியுள்ளது. வரிக் குறைப்பின் பலன்களை விரைந்து மக்களுக்கு வழங்குவதில், தொழில் துறை, அரசுடன் ஒருங்கிணைந்து செயல்படும் என்றும், இந்த அமைப்பு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

*ஜிஎஸ்டி தொழில் 2 (6)*

ஜிஎஸ்டி வசூல் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், புதிய சீர்திருத்தங்கள், ஜிஎஸ்டி கட்டமைப்பின் முதிர்வை வெளிப்படுத்தும் வகையில் அமைந்து இருப்பதாக, ஃபிக்கி-தொழில் வர்த்தகக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் திரு. சுப்ரகாந்த் பாண்டா கூறியுள்ளார். சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதற்கான அஸ்திவாரம், புதிய சீர்திருத்தங்களால் மேலும் வலுப்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

------------------------

கோயல்-ஜிஎஸ்டி (8)

உணவு, உடை, மருந்து உட்பட, அன்றாட பயன்பாட்டிற்கான, அநேகமான எல்லா பொருட்கள் மீதும், ஜிஎஸ்டி குறைக்கப் பட்டுள்ளதால், நுகர்வோர் பெரிய அளவில் பயன் பெறுவார்கள் என்று, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார். சரக்கு மற்றும் சேவை வரியில், பெரிய தீபாவளி பரிசு காத்திருப்பதாக, ஆகஸ்ட் 15ஆம் தேதி பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்ட அறிவிப்பு, தற்போது நிறைவேற்றப் பட்டுள்ளதாக, அவர் இன்று புதுடெல்லியில், நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறினார்.

------------------------

ஜிஎஸ்டி புதுச்சேரி (4)

வரிக் குறைப்பு உட்பட, ஜிஎஸ்டி கட்டமைப்பில் மத்திய அரசு அறிவித்துள்ள மாற்றங்களை, புதுச்சேரியிலும் பல்வேறு தரப்பினர் வரவேற்றுள்ளனர். இதுகுறித்து, புதுச்சேரி வர்த்தக சபைத் தலைவர் திரு. குணசேகரன் உட்பட, பல்வேறு தரப்பினர் வெளியிட்டுள்ள கருத்துக்கள்.....

**(வாய்ஸ்-பல்வேறு தரப்பினர்)**

------------------------

*பிஜேபி – ஜிஎஸ்டி (6)*

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரும் பயன்பெறுவார்கள் என்று, பிஜேபி கூறியுள்ளது. கட்சியின் செய்தி தொடர்பாளர் திரு. சம்பீத் பாத்ரா, இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், வரி குறைப்பு அறிவிப்பை தொடர்ந்து,

நாட்டில் மகிழ்ச்சிகரமான சூழல் உருவாகி இருப்பதாகவும், விவசாயிகள் உட்பட அனைத்துப் பிரிவினரும், புதிய சீர்திருத்தங்களை கொண்டாடி வருவதாகவும் கூறினார்.

------------------------

*சிதம்பரம்-ஜிஎஸ்டி* (7)

வரிக் குறைப்பு உட்பட, ஜிஎஸ்டி கட்டமைப்பில் மத்திய அரசு அறிவித்துள்ள மாற்றங்களை, முன்னாள் மத்திய நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் வரவேற்றுள்ளார். இன்று மதுரையில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், தற்போது அரசு அறிவித்துள்ள மாற்றங்கள், ஏற்கனவே தங்களால் வலியுறுத்தப் பட்டவைதான் என்றார். ஜிஎஸ்டி கட்டமைப்பின் தற்போதைய வடிவத்தையும், இன்றுவரை உள்ள வரி விகிதங்களையும், ஆரம்பத்தில் அமல்படுத்தி இருக்கவே கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

------------------------

*நிதி ஆயோக்* (10)

இந்தியா, வெளிநாட்டு தொழில்நுட்பங்களை மட்டுமே நம்பி இருக்க முடியாது என்பதால், சொந்தமாக புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குதல் அவசியம் என்று, நிதி ஆயோக் தலைமை செயல் அதிகாரி திரு. BVR. சுப்ரமணியம் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், நவீன தொழில்நுட்பங்கள் பற்றிய காலாண்டு அகப்பார்வை அறிக்கையை வெளியிட்டு பேசுகையில், அவர் இவ்வாறு வலியுறுத்தினார். செமி கண்டக்டர் உற்பத்தியில் சிலிக்கான் பயன்பாட்டை தவிர்க்கும் வகையில்,

சில அணுக்கள் அளவில் மட்டுமே தடிமன் உள்ள 2D தகடுகளின் உற்பத்திக்கான தொழில்நுட்பங்களை உள்நாட்டிலேயே உருவாக்குவதன் மூலம், இந்தியா இத்துறையில் உலக சக்தியாக மேம்பட முடியும் என்று அவர் தெரிவித்தார்.

-----------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

புதுடெல்லியில், சிங்கப்பூர் பிரதமருக்கும், பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும் இடையிலான பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, பல்வேறு துறைகளில், 5 **இருதரப்பு உடன்பாடுகள்** கையெழுத்தாகி உள்ளன.

வங்கி சேவைகளை, மக்களின் வீட்டிற்கே சென்று வழங்கும், உலகின் மிகப் பெரிய வங்கிக் கட்டமைப்பாக, **இந்தியாவின் அஞ்சல் துறை** மேம்பட்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்திய உயர்கல்வி நிறுவனங்களுக்கான NIRF தரவரிசைப் பட்டியலில் **சென்னை ஐஐடி-இந்திய தொழில்நுட்பக் கழகம்** முதல் இடம் பெற்றுள்ளது.

வரிக் குறைப்பு உட்பட, ஜிஎஸ்டி கட்டமைப்பில் மத்திய அரசு அறிவித்துள்ள மாற்றங்களை, புதுச்சேரி உட்பட நாடு முழுவதும், அனைத்துத் தரப்பினரும் வரவேற்றுள்ளனர்.